திரு. கு. ரமணி : அது நடக்கிறதுஎன்று நினைக்கிறேன். சில தொண்டு ஸ்தாபனங்கள், பொது ஜன சேவா ஸ்தாபனங்கள் 50, 100 பேர்கள் ஒட்டு மொத்தமாக எந்த வெகுமதியும் பெறாமல் கொடுக்கக் கூடிய ரத்த தானத்தை ஒரே சமயத்தில் எடுத்து சேமிக்க வசதிகள் இல்லை என்று சொல்கிறார்கள். உதாரணமாக கோவை சி. எம். சி. மருத்துவமனையில் 15 நாட்களுக்குள் உபயோகப்படுத்தக் கூடிய அளவில் தான் இரத்தத்தை எடுத்து வைக்க முடியும் என்ற நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு மேலும் சேமித்து வைக்க வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சிரமம் இருக்கிறது என்பதை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் பொதுவாக சென்னையிலே ஒரு இரத்த சேமிப்புக் கிடங்கை வைக்கலாம் என்ற யோசனையை தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவ மனையில் மட்டுமல்லாமல், அரசாங்கமே பொதுவாக இரத்த சேமிப்பு வங்கி வைக்கலாம் என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. சென்னையிலே வெற்றி பெற்றால், கோவையிலே திறப்பதற்கு உத்தேசிக்கலாம்.

தமிழகக் கடலோரச் சாலையை நீரோடி வரையிலும் நீட்டித்தல்.

10—(*வினா எண், 75997) திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நிர்மாணப்பணி ஆரம்பித்துள்ள கடலோரச் சாலையினை தமிழ் நாட்டின் கடலோர எல்லையான நீரோடி வரையிலும் அமைக்கும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்படும் சாலைப் பணியை மேற்கொள்ள வேண்டுமாயின் சில இடங்களில் சாலையில் உள்ள பகுதிகளை உயர்த்தியும், சிறு பாலங்களை அகலப்படுத்தவும், புதுப்பிக்கவும் மேலும் புதிய சாலை இணைப்புகளும் புதிய பால அமைப்பும் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு சுமார் ரூ. 900.00 இலட்சம் தேவைப்படுவதால் அரசின் குறுகிய நிதி வசதி காரணமாக உடனடியாக மேற்கொள்ள இயலாது.

1987 மார்ச் 2]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி போக்குவரத்து சாலையில் போக்குவரத்து மிகவும் நெருக்கடியாக இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே அந்தப் பகுதியிலே கடலோரச் சாலையை மாற்றுப் பாதை என்ற முறையிலே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தெரியாமல் அல்ல. ஆனால் நிதிப் பிரச்சினை காரணமாக எல்லாவற்றையும் உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. ஏற்கனவே பல வேலைகளை எடுத்துச் செய்து கொண்டிருந்ததால் அந்தப் பாதையைப் பொறுத்தவரையில், கொஞ்சம் அதிகத் தொகையாகும் என்ற காரணத்தினால், ஒரு பகுதியைச் செய்வதனால் பலன் இருக்காது. முழுவதையும் செய்ய வேண்டுமென்ற நிலை இருப்பதனால் அந்தப் பாதையை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் யோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருவனந்தபுரம் வரை ஒரு மாற்றுப் பாதை என்ற முறையிலே கடலோரச் சாலை அமைப்பது சம்பந்தமாக எல்லா இடங்களிலேயும் உடனடியாக செய்ய முடியாவிட்டாலும் கூட, மிக முக்கியமான போக்குவரத்து நெருக்கடி இருக்கக்கூடிய இடங்களிலாவது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது பற்றி தனியாக யோசித்துப் பார்க்கலாம்.

ஆயக்குடி—கோடைக்கானல் சாலையில் சர்வே செய்ய நடவடிக்கை.

11—(*வினா எண். 7825)—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி - கொடைக்கானல் (வழி) சட்டப்பாறை ரோடு, மேல் மட்டம், செம்பிரான் குளம் ஆகிய பகுதிகளை கொடைக்கானலுடன் இணைப்பதற்கு சர்வே செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?